

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 18-11-2024


# மீண்டும் மணிப்பூர்

**மீண்டும் மணிப்பூர் ... மீண்டும் மணிப்பூர் ... என்று இன்னும் எத்தனை ஆண்டு காலத்துக்கு இன்னும் எத்தனை தலையங்கம் தீட்டுவது? எரியும் மணிப்பூரை அணைக்கும் செயலைச் செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசு துளியும் முயற்சிகள் எடுத்ததாகத் தெரியவில்லை.**

**காசாவுக்காக கவலைப்படும் பிரதமர் மோடி, உக்ரைனுக்காக உள்ளம் துடிக்கும் பிரதமர் மோடி.. உள்நாட்டு மணிப்பூரை மறந்து விட்டு, வெளிநாடு சுற்றி வருகிறார். ஒருவேளை மணிப்பூர் கவலையை மறப்பதற்காகத்தான் வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறாரோ என்னவோ?**

ஒன்றிய பா.ஜ.க.வின் உள்துறை அமைச்சகம், உதவாக்கரை நிலையில் இருப்பதன் அடையாளம்தான் மணிப்பூர். பா.ஜ.க. ஆட்சி அமையும் மாநிலமானது எப்படி ஆகும் என்பதற்கு உதாரணம்தான் மணிப்பூர்.

ஒன்றரை ஆண்டுகளாக மணிப்பூர் எரிகிறது. அணைப்பார் இல்லாமல் எரிகிறது. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசுக்கும் கவலையில்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் சொரணை இல்லை.

கடந்த 13 ஆம் தேதி அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 11 பேர் கொல்லப்பட்டார்கள். ஜிரிபாம் மாவட்டத்தின் காவல் நிலையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும், அதனால் சி.ஆர்.பி.எஃப். சுட்டதாகவும் சொல்லப்படுகிறது. இதைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் வன்முறை பரவியது. உடனடியாக மணிப்பூருக்கு 20 கம்பெனி, மத்தியப் படையை அனுப்பி வைத்தது ஒன்றிய அரசு. ஏற்கனவே 198 கம்பெனி மத்தியப் படை அந்த மாநிலத்தில் இருக்கிறது.

கடந்த வாரத்தில் இருந்து ஜிர்பாம் மாவட்டத்தில் வன்முறை அதிகமாகி வருகிறது. கடந்த 13 ஆம் தேதி அரமாய் தெங்கோல் பகுதிக்குள் புகுந்த கலவரக்காரர்கள், வீடுகளுக்கு தீ வைத்தனர். 31 வயதான ஆசிரியை ஒருவரை இழுத்து வந்து சித்திரவதை செய்தார்கள். பின்னர் உயிரோடு கொளுத்தினார்கள்.

மணிப்பூர் மாநிலம் ஜிரிபாம் மாவட்டத்தில் கடந்த 11 ஆம் தேதி 6 பேர் கடத்தப்பட்டார்கள். அந்த 6 பேரும் கடந்த 16 ஆம் தேதியன்று உயிரற்ற உடல்களாக மீட்கப் பட்டுள்ளார்கள். ஜிரி ஆற்றங்கரையில் இருந்து 3 உடல்களும், பராக் நதி ஆற்றங்கரையில் இருந்து 3 உடல்களும் மீட்கப் பட்டுள்ளன. இதில் பத்து மாதக் குழந்தை ஒன்றும் இருக்கிறது. இவர்கள் அனைவரும் அரசின் நிவாரண முகாமில் தங்கியிருந்தவர்கள். மணிப்பூர் மீண்டும் எரிய இதுதான் காரணம்.

பொதுமக்களை கொந்தளிக்க வைத்துள்ளது இந்த மரணங்கள். மணிப்பூர் முதலமைச்சர் பிரேன்சிங் வீட்டின் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். பா.ஜ.க. அமைச்சர்களின் வீடுகள் தாக்கப்பட்டுள்ளன. எம்.எல்.ஏ.க்கள் வீடுகளும் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன.

முதலமைச்சர் பிரேன்சிங்கின் மருமகன் ராஜ்குமார் இமோசிங் எம்.எல்.ஏ.வாக இருக்கிறார். அவர் வீடும் தாக்கப்பட்டுள்ளது. 6 எம்.எல்.ஏ.க்களின் வீடுகள் சூறையாடப்பட்டுள்ளன. போராட்டக்காரர்களை கண்ணீர் புகை குண்டுகள் மூலமாகக் கலைத்து வருகிறார்கள்.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரான சபம் ரஞ்சன் லாம்பெல் வீடு தாக்கப்பட்டது. அப்போது அவர் வீட்டுக்குள்தான் இருந்தார். 'இந்த பிரச்சினையை தீர்த்து வைப்பேன், இல்லாவிட்டால் பதவி விலகி விடுவேன்' என்று போராட்டக்காரர்களை பார்த்து கையெடுத்து கும்பிட்டுள்ளார் அமைச்சர்.

மணிப்பூர் மாநிலத்தில் இணையத் தளச் சேவை முடக்கப்பட்டுள்ளது. இம்பால் மேற்கு, இம்பால் கிழக்கு, பிஷ்ணுபூர், தோபால், சுராசந்த்பூர், காங்போக்பி, கக்சிங்கில் ஆகிய மாவட்டங்களில் இணையத் தளச் சேவை முடக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் செய்திகள் பரவாது என்று நினைத்து தடை செய்துள்ளார்கள். பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

‘‘**மணிப்பூர் மாநிலத்தில் பாதுகாப்புச் சூழல் கடந்த சில நாட்களாக பலவீனமாகவே உள்ளது. இரண்டு சமூகத்தினைச் சேர்ந்த ஆயுதம் ஏந்திய குற்றவாளிகள் வன்முறையில் ஈடுபடுவது தேவையில்லாத உயிரிழப்புகளுக்கும், பொது அமைதி சீர்குலைவுக்கும் வழிவகுக்கிறது. சட்டம் - ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் படி பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வன்முறை மற்றும் அமைதியைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்**’’ **என்று ஒன்றிய உள்துறை அமைச்சகம் அறிக்கை கொடுத்திருக்கிறது. இப்படி ஒரு அறிக்கையைக் கொடுக்க அவர்களுக்கு கூச்சமாக இல்லையா?**

ஒன்றரை ஆண்டுகளாக மணிப்பூர் நிலவரம் என்பது இதுதான். எரிவது, அணைப்பது! கலவரம் நடப்பது, கட்டுப்படுத்துவது! கொல்வது, அடக்கம் செய்வது! இந்த மூன்று செயல்கள்தான் ஒன்றரை ஆண்டுகளாக நடக்கிறது. 2023 மே மாதத்தில் இருந்து கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 என அதிகாரப்பூர்வமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கூடுதலாகத்தான் இருக்கும். ஆனால் இன்னமும் அறிக்கை கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில்தான் ஒன்றிய அமைச்சகம் இருக்கிறது.

குக்கி - மைத்ரி இன மக்களின் மோதலாக இது தொடங்கினாலும் பா.ஜ.க. அரசின் கையாலாகாத்தனமே இதனை இத்தனை மாதங்கள் நீட்டிக்கக் காரணம் ஆகும். இரண்டு இன மக்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். இரு இன மக்களும் முகாம்களில் வசித்து வருகிறார்கள். கலவரத்தில் இருந்து தப்பிக்க இரு இன மக்களும் பக்கத்து மாநிலங்களுக்கு போய்விட்டார்கள். லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கை அப்படியே தலைகீழாக மாறிவிட்டது. பள்ளிகள், கல்லூரிகள் இப்போது குடியிருப்புகளாக மாறப் பட்டு விட்டன. மக்களை அங்கு தங்க வைத்துள்ளார்கள். அதனால் பள்ளி, கல்லூரிகளின் செயல்பாடும் முடங்கிக் கிடக்கிறது. நான்கைந்து குடும்பங்கள் ஒரே வீட்டில் தங்கி இருக்கிறார்கள்.

**முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு உணவும், அவசியப் பொருள்களும் கிடைத்து விடும் என நினைக்க வேண்டாம். தங்குவதற்கு இடம் கொடுத்தார்களே தவிர மற்ற வசதிகள் எதுவும் இல்லை. இரண்டு இன மக்களுடன் தனித்தனியாக பா.ஜ.க. அரசு பேசவில்லை. இரு இன மக்களுக்கும் ஒன்றிய அரசின் மீது நம்பிக்கை வரவில்லை. பிறகு எப்படி அமைதியை ஏற்படுத்துவார்கள்?**

மொத்தத்தில் மணிப்பூர் மக்களை சொந்த நாட்டு அனாதைகளாக வைத்திருக்கிறார்கள். உங்களுக்குள் அடித்துக் கொண்டு - உங்களுக்கான முடிவைத் தேடிக் கொள்ளுங்கள் என்று விட்டுவிட்டார்கள் என்றேதான் சொல்ல வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) நீலாங்கரையில் நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினரும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளருமான எஸ்.எஸ். பாலாஜி அவர்களின் மகன் மரு. பா. கௌதம் – மரு. இரா. கீர்த்தி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிக்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### 14வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன் ஷிப் 2024

# இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்கப்பதக்கம் - கோப்பை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ. 18 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14-வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் - 2024 இறுதி போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்க பதக்கத்தை அணிவித்து, கோப்பையை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.11.2024) சென்னை எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் நடைபெற்ற 14வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் - 2024 இறுதி போட்டியில் வெற்றி பெற்ற ஒடிசா அணி வீரர்களுக்கு தங்க பதக்கத்தை அணிவித்து, கோப்பையை வழங்கினார்.

இந்த போட்டிகளில் இரண்டாம் இடம் பிடித்த ஹரியான அணி வீரர்களுக்கு வெள்ளி பதக்கம் அணிவிக்கப்பட்டு, கோப்பை வழங்கப்பட்டது. மூன்றாம் இடம் பிடித்த உத்தரபிரதேசம் அணி வீரர்களுக்கு வெண்கலப் பதக்கம் அணிவிக்கப்பட்டு, கோப்பை வழங்கப்பட்டது. 14வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் 2024 போட்டிகள், தமிழ்நாடு ஹாக்கி சங்கத்தின் சார்பாக நவம்பர் 4ந் தேதி முதல் 16ஆம் தேதி வரை சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் 29 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்டனர். நவம்பர் 2023 இல் தமிழ்நாடு ஹாக்கி சங்கம் 13 வது ஹாக்கி இந்தியா சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியை நடத்தியது. அதனை தொடர்ந்து, இந்த ஆண்டும், தமிழ்நாடு ஹாக்கி சங்கம் 2வது முறையாக சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

இந்த சாம்பியன்ஷிப் போட்டிகளின்போது, வருங்கால இந்திய அணிக்கான இளம் வீரர்களை தேர்வு செய்ய ஹாக்கி இந்தியா தலைமை பயிற்சியாளர் கிரேக் ஃபுல்டன் மற்றும் தேர்வுக் குழுவினர்கள் கலந்து கொண்டனர். நடைபெறவிருக்கும் ஐரோப்பா சுற்றுப்பயண போட்டியில் இந்திய சீனியர் ஆண்கள் அணியில் பங்கேற்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாக்கி வீரர் கார்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவ்விழாவில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் திலீப் டிர்கி, ஹாக்கி இந்தியா பொருளாளர் மற்றும் தமிழ்நாடு ஹாக்கி சங்கத்தின் தலைவர் சேகர் மனோகரன், பொதுச் செயலாளர் முனைவர் செந்தில் ராஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஒரு மாதம் தொடர்ந்து கொண்டாடப்படும்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

மதுரை, நவ.18 -

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவை பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் ஒரு மாதம் தொடர்ந்து கொண்டாடப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்

மதுரை வடக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் மதுரை உத்தங்குடியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் எம்.ஆர்.எம்.பால சுப்பிரமணியன் தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஆசைக்கண்ணன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கருதியாக ராஜன், வடிவேல் முருகன், புதூர் சேகர், வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளின் பொறுப்பாளர்கள் செந்தில்குமார், கிருஷ்ண குமார், செல்வகுமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது

வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் இளைஞர் எழுச்சி நாளான தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை வருகின்ற 27ஆம் தேதி துவங்கி ஒரு மாத காலத்திற்கு ஏழை, எளியோர் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் என எழுச்சியுடன் தொடர்ந்து நடத்திட வேண்டும். விரைவில் தமிழ்நாடு முதல்வர் மதுரை மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்ள உள்ளார், அப்போது கழக நிர்வாகிகளையும் சந்தித்து கழக ஆக்க பணிகள் குறித்து ஆய்வு நடத்த உள்ளார்.

மேலும் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் இருநூறு தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வேண்டுமென கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார், அதற்கேற்ப மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவிக்கும் வேட்பாளர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அதற்கான பணிகளை இப்போதே தொடங்க வேண்டும்.

மேலும் தேர்தல் பணியோடு மக்கள் பணியையும் செய்திட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு மாவட்டமாக முதல்வரும் துணை முதல்வரும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்கள் நலத்திட்டங்களை வழங்கி வருகின்றனர், நமது மாவட்டத்தின் சார்பாக கூட ஒத்தக்கடையில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் கட்சி பாகுபாடின்றி பல்லாயிரக்கணக்கானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வருகிற பிப்ரவரி மாதத்தில் ஒரு மிகப்பெரிய எழுச்சியை தமிழகம் முழுவதும் உருவாக்குவதற்காக கூட்டணி கட்சியினர் அனைவரையும் அரவணைத்து பொதுமக்களை சந்திக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது, ஆகவே அன்று எதிர்க்கட்சியாக இருந்த போதே நம்முடைய மாவட்டம் சிறப்பாக செயல்பட்டது, அதைப்போல இன்றைக்கு நம்முடைய அரசு ஆட்சி பொறுப்பில் இருக்கிற போது அதைவிட பல மடங்கு சிறப்பாக செயல்பட வேண்டும், செயல்படுவோம் என்ற தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே வருகிற 27ஆம் தேதி முதல் வடக்கு மாவட்டத்தின் சார்பாக அனைத்து பகுதிகளிலும் சிறப்பாக கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாவை கிராமங்கள், நகரங்கள் தோறும் விழாக்கோலம் காணும் வகையில் கொண்டாடப்பட வேண்டும் அதற்காக அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழகம் மற்றும் பேரூர் கழகத்தில் எந்தெந்த பகுதியில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடத்த உள்ளோம் என்பதை மாவட்ட கழகத்திற்கு அனைவரும் தகவல் தர வேண்டும் என கூறினார். மேலும் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்குதல் உள்ளிட்ட பணிகளில் கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி பாக முகவர்கள் முழுமையாக ஈடுபட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்

மேலும் இக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், பொதும்பு தனசேகர், பசும்பொன்மாறன், பால ராஜேந்திரன், தன்ராஜ், பரந்தாமன், மதிவாணன், பகுதி செயலாளர்கள் மருது பாண்டியன், சசிக்குமார், கௌரிசங்கர், பாண்டியராஜன், பேரூர் செயலாளர்கள் மு.பால் பாண்டியன், சத்தியபிரகாஷ், ரகுபதி, மனோகர வேல் பாண்டியன், மாவட்டப் பிரதிநிதி அழகு பாண்டி, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வீரராகவன், ஆதிசங்கர், இளங்கோவன், ஒத்தக்கடை சரவணன், மூவேந்திரன், கலை கார்த்திகேயன், ஜான், தக்காக்குடி சரவணன், வெற்றிச்செல்வன், மருதுராஜா, வன்னிமுத்துப்பாண்டி, மாவட்ட அறங்கால் குழு தலைவர் ரவிச்சந்திரன், மேலூர் நகராட்சி சேர்மன் முகமது யாசின், மாமன்ற உறுப்பினர்கள் உத்தங்குடி தன்ராஜ், திருப்பாலை ராமமூர்த்தி, சோழவந்தான் பேரூராட்சி சேர்மன் ஜெயராமன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

கூட்டம் முடிவில் கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில் திறந்து வைக்கவிருக்கும் ஜானகிபுரம் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபம் மற்றும் 21 சமூகநீதி போராளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள மணி மண்டபங்களின் கட்டுமான பணிகளையும் , திருவெண்ணெய்நல்லூர் எல்லீஸ் சத்திரம் அணையையும் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் சி பழனி. மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட எஸ்.பி தீபக்சுவாச், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகர செயலாளர் இரா.சக்கரை ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர் சு விசுவநாதன் , தே.முருகவேல், வே.கணேசன், கு.செல்வமணி, வி.ஜி.பிரபாகரன், பேரூர் செயலாளர் பா ஜீவா, ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் , நகர பொருளாளர் என்.என். இளங்கோ, மாவட்ட வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.